செ.வெ.எண்:39 நாள்:18.8.2018

**கரூர் மாவட்டம்**

**வெள்ளத்ததால் பாதிக்கப்பட்டுள்ள 100 குடும்பங்களுக்கு நிவாரண நிதி உதவியுடன் கூடிய பொருட்களை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் முன்னிலையில் வழங்கினார்.**

அதன் விபரம் வருமாறு:

கர்நாடகாவிலிருந்து அதிக அளவிலான காவிரி நீர் திறந்துவிடப்படுவதால் கரூர் மாவட்டத்தில் தவிட்டுப்பாளையம், மல்லம்பாளையம், திருமுக்கூடலூர் உள்ளிட்ட பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் இருந்த பொதுமக்கள் பாதுகாப்பாக வெளிரேற்றப்பட்டு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தவிட்டுப்பாளையம் நஞ்சை புகளூர் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள பொதுமக்களை மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று(18.8.2018) நேரில் சந்தித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் முன்னிலையில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தற்போது ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகள் குறித்த விபரங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தொடர்ந்து கணக்கெடுக்கப்பட்டும், அனைத்துப்பகுதிகளும் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டும் வருகின்றது. இன்று மாயனூர் கதவணைக்கு வரும் சுமார் 2.28 லட்சம் கன அடி அளவிலான நீர் அப்படியே வெளியேற்றப்பட்டு வருகின்றது. அமராவதிக்கு வரும் 5,200 கன அடி நீரில் சுமார் 4,730 கனஅடி நீரானது வெளியேற்றப்படுகின்றது. கரூர் மாவட்டம் முழுவதும் உள்ள நீர் வரத்துப்பகுதிகளில் அரசுத்துறை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிப்புப்பணியில் ஈடுபட்டுள்ளனர். வெள்ளப்பாதிப்புகளுக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்று மாண்மிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளதின்பேரில் கரூர் மாவட்டத்தில் உள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 100 குடும்பங்களுக்கும் வேட்டி,சேலை, 10 கிலோ அரிசி, 1லிட்டர் மண்ணெண்ணை, தலா ரூ. 1000 நிவாரண உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து அவர்களுக்குத் தேவையான உணவும், மருத்துவ உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

கரூர் மாவட்டத்தில் காவிரி மற்றும் அமராவதி நீர் வரும் பகுதிகளில் வருவாய்த்துறை, வளர்ச்சித்துறை, பொதுப்பணித்துறை மற்றும் காவல்துறையினர் தொடர்ந்து தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பொதுமக்களும் ஒத்துழைப்பு தந்து, ஆற்றங்கரையோரப்பகுதிகளில் குளிப்பதையோ, வேடிக்கை பார்க்க செல்வதையோ, செல்பி புகைப்படங்கள் எடுப்பதையோ தவிர்க்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, வருவாய்க்கோட்டாட்சியர் திரு.கு.சரவணமூர்த்தி, கூட்டுறவு சங்கப்பிரதிநிதிகள் திரு.காளியப்பன், திரு.கமலக்கண்ணன், திரு.ஜெயராஜ், திருமதி.மல்லிகா சுப்பராயன், திரு.செல்வராஜ் மண்மங்கலம் வட்டாட்சியர் திருமதி.கற்பகம் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்.**